DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 380 /2023 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | கணேசன் |
| Father's /Husband Name | : | கருப்பையா |
| Village | : | திருச்சி |
| Taluk | : | திருச்சி |
| Age | : | 50 |
| Occupation | : | அரசி வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day May 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

நலம் இயற்கை நலவாழ்வு மற்றும் யோகா ஆராய்ச்சி மையம் நான் பாரம்பரியம் அரிசி வியாபாரம் செய்து வந்தேன். அ.சா.1 தம்பி மனைவி ஆவார். கடந்த 24.08.2022 ஆம் தேதி மாலை 06.15 மணியளவில் கும்பகோணம் குவாலிட்டி இன் விகா ஓட்டலில் பரதநாட்டிய நிகழச்சிக்கு நானும், எனது தம்பி சிவசங்கர், அவரது மனைவி அ.சா.1, அவரது இரண்டு குழந்தைகள் சென்றோம். நிகழச்சி முடிந்து 08.40 மணியளவில் காடுவெட்டி தெருவில் உள்ள அ.சா.1ன் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீடு மற்றும் பீரோ திறந்துகிடந்தது. எந்த பொருட்களும் உடைக்கப்படவில்லை. வீட்டின் ஒரு சாவி எங்களிடம் இருந்தது, மற்றொரு சாவி காணவில்லை. உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த மொத்தம் 48 பவுன் நகைகள் காணவில்லை. இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அ.சா.1ன் வீட்டில் அ.சா.1 அவரது கணவர், இரண்டு குழந்தைகள் மற்றும் வீட்டில் வேலை செய்யும் நபர் இருந்தார்கள். எங்கள் எதிர் வீட்டில் உள்ள cctv camera வை பார்த்தபோது நகை திருடி சென்றது அ.சா.1வீட்டில் வேலை செய்யும் ஆஜர் எதிரி இலக்கியா என தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

சம்பவத்தன்றும், சம்பவத்திற்கு மறுநாளும் சம்பவயிடத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள். காவல் நிலையத்திற்கு அழைத்தும் தவிசாரித்தார்கள். அ.சா.1 சாய் இல்லத்திற்கு எதிரே உள்ள வீட்டில் cctv camera வை பார்த்தோம். எங்கள் குடும்பத்தில் உள்ளவர் முதலில் cctv camera வை பார்த்தோம். போலிசார் hard disk பெற்று சென்று cctv பதிவுகளை பார்த்தார்கள். அந்த பதிவில் எதிரி எந்த நேரத்தில் நகைகள் எடுத்ததாக உள்ளது என்றால் மாலை சுமார் 06.45 – சுமார் 07.20 மணிக்குள் இருக்கும்.

2. சம்பவம் நடந்து சுமார் 3 நாட்கள் கழித்து cctv camera பதிவுகளைபார்த்தோம். போலிசார் எந்த தேதியில் cctv camera பார்த்தார்கள் என்றால் நினைவில்லை. போலிஸ் விசாரணையில் எந்த பொருட்களும் உடைக்கப்படவில்லை. வீட்டின் ஒரு சாவி எங்களிடம் இருந்தது, மற்றொரு சாவி காணவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றல் சொல்லியுளேன். எதிரி அ.சா.1 வீட்டில் வேலை செய்பவர் என்று போலிசாரிடம் சொல்லியுள்ளேன். cctv பதிவுகளில் எதிரி நகையை பையில் எடுத்து சென்றது பதிவாகியுள்ளது என்று போலிசாரிடம் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், வேறொரு நபரிடமிருந்து நகையை கைப்பற்றி எதிரிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.